# VELLORE DISTRICT

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பொருளியல்

## விடைக் குறிப்புகள்

11

*PREPARED BY*
**Dr. C. SUDHAKAR M.A., M.Phil., B.Ed.,Ph.D**
GBHSS USSOOR
**K. SUDHAKAR M.A., B.Ed.,**
GHSS PANAMADANGI

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இ | வெளிநாட்டு நேரடி முதலீடு | 6 | அ | ஏழ்மை |
| 2 | ஆ | சட்டபூர்வமான குழு | 7 | ஈ | 2015 |
| 3 | ஈ | ஒரு முனைவரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது. | 8 | ஆ | திருப்பூர் |
| 4 | இ | காண்ட்லா | 9 | ஈ | எட்டு |
| 5 | ஆ | மறைமுக வேலையின்மை | 10 | ஆ | சென்னை |

**11.** பொதுத் துறையின் நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதை குறிக்கும்.

**12.** 1. கிராமங்களில் காணப்படும் வறுமை ஊரக வறுமை ஆகும்.
2. அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையை ஊரக வறுமை எனலாம்.

**13.** ஊரகப் பொருளாதாரம் பொருளாதார கொள்கைகளை பயன்படுத்தி, ஊரகப் பகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதைக் குறிக்கிறது.

**14.** நிதி குறைபாடுகளை சமாளிக்கவும், நேரடி முதலீட்டை ஈர்க்கவும் 2000-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்ட கொள்கைகள் ஆகும்.

**15.** 1. சென்னை 2. எண்ணூர் 3. தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம்.

**16.** மாநிலத்தில் ஓராண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பு ஆகும்.

**17.** 1. கல்பாக்கம் 2.கூடங்குளம்

**18.** உள்நாட்டு பொருளாதாரத்தை ஏனைய உலக பொருளாதாரத்தோடு இணைப்பது உலகமயமாதல் எனப்படும்.

**நடவடிக்கைகள்**

1. சுங்க வரி குறைப்பு மற்றும் சுங்க வரி தவிர்ப்பு.
2. நேரடி முதலீடு (FDI) மற்றும் அயல் நாட்டு தொகுப்பு முதலீடு.

**19.** 1. பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது.
2. விரைவில் அழுகும் தன்மையுடைய இப்பண்டங்களை சந்தைப்படுத்துவதில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
3. இந்த பிரச்சினையை சமாளிக்க, இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம், அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி (1955) "குளிர்பதன கிடங்கு ஆணை 1964" என்பதை ஏற்படுத்தியது.

**20.** GST என்பது நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரி ஆகும்.
(வரி விகிதங்கள்: 5%, 12%, 18%, 28%)

**நன்மைகள்**

1. அடுக்கு வரி விளைவுகளை நீக்கியது.
2. ஒருமுனை வரியாக உள்ளது.
3. இணையவழி வசதி மூலம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.
4. மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது.
5. தளவாடங்களின் திறன் அதிக படுத்தப்பட்டுள்ளது.

**21.** **(ஏதேனும் மூன்று )**

1. ஊரக பகுதியின் முன்னேற்றம் இன்றி நாட்டின் முன்னேற்றம் அமையாது.
2. கிராமங்களை முன்னேற்றுவதன் மூலம் வேலைவாய்ப்பை தேடி நகர்புற பகுதிகளுக்கு இடம் பெயர்வதை தடுக்கலாம்.
3. ஊரக மேம்பாட்டின் மூலம் இலாபகரமாக வேலை வாய்ப்புகளையும், உணவு உற்பத்தியையும் பெருக்க இயலும்.
4. ஊரக பகுதிகளை முன்னேற்றுவதன் மூலம் இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்த இயலும்.
5.கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளின் வேறுபாட்டை குறைக்க முடியும். இதற்காக அப்துல்கலாம் அவர்கள் PURA என்ற திட்டத்தை கூறினார்.

**22.** 1. ஊரக வேலைத்திட்டம் : ஊரக சமுதாய ஆக்கப் பணிகள் செய்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை திட்டமிட்டு செய்வதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம். **(உ.தா)** சாலை வசதி, கால்வாய் தோண்டுதல்
2. ஊரக தொழில்மயமாக்கல் : வேலைவாய்ப்பினை உருவாக்க ஊரக பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.
3. தொழில் நுட்ப கல்வி : பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், வேலைவாய்ப்பு சார்ந்த படிப்புகளை உருவாக்கி அதன் மூலம் சுயமாக தொழில் துவக்க வழிவகை செய்ய வேண்டும்.

**23.** **(ஏதேனும் மூன்று )**

1. தமிழ்நாடு இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளி உற்பத்தி மையமாகும். மேலும் இந்தியாவின் நூல் கிண்ணம் என அழைக்கப்படுகிறது. இந்திய அளவில் 41% நூல் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.
2. மொத்த ஏற்றுமதி வருவாயில் 35% ஜவுளித்துறையிலிருந்து கிடைக்கிறது.
3. பருத்தி, பாலியஸ்டர், கலப்பு நுல், பட்டு நூல் போன்றவை இங்கிருந்து சீனா வங்கதேசம் போன்ற பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
4. பின்னலாடைகளின் நகரம் என அழைக்கப்படும் திருப்பூர் 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பளவில் பின்னலாடைகளை ஏற்றுமதி செய்கிறது.
5. ஈரோடு மாவட்டம் ரெடிமேட் ஆடைகளுக்கான முக்கிய சந்தையாக உள்ளது.

**24.** **(ஏதேனும் மூன்று )**

1.சுய உதவிக் குழுவின் (Self Help Group) உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள்.
2. பெரும்பாலான சுய உதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை.
3. சுய உதவிக் குழுக்கள் தமக்கென்று வடிவமைக்கப்பட்ட சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன.
4. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்தாலோசித்து முடிவெடுப்பதுடன், தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்கின்றனர்.

**25. அ)**

**நோக்கங்கள்**

1. அன்னிய நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல்.
2. பன்னாட்டு வியாபாரத்தில் மற்றும் உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்.
3. கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்.
4. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.
5. கட்டமைப்பு உசதிகளை உருவாக்குதல்.

**பண்புகள்**

1. பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்.
2. தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.
3. நெறி முறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்.
4. தனிப்பட்ட விருப்பப் பகுதியைக் கொண்டது.
5. தாராளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

**25. ஆ)**

ஆண்டிற்கான ஏற்றுமதி-இறக்குமதி கொள்கையின் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று 2015-2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிப கொள்கையை அறிவித்தது.

**சிறப்பம்சங்கள்**

1. ஏற்றுமதி உதவிகளை 25% அளவு குறைக்கவும், இந்தியப் பொருட்களை ஊக்குவிக்கவும் "இந்திய தயாரிப்பு" (MAKE IN INDIA) என்ற கருத்து உருவாக்கப்பட்டது.
2. டிஜிட்டல் இந்தியா முறைப்படி வரி தாக்கல், முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி தயாரிக்கப்படுகின்றது.
3. ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.
4. பாதுகாப்பு, ராணுவ கிடங்கு, விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவை தொடர்பான ஏற்றுமதி கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்கள் ஆகும்.
5. தற்போது உலக வர்த்தகத்தில் 3% இருக்கின்ற இந்தியாவின் பங்கை 2020-க்குள் இரு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

**26. அ)** **(ஏதேனும் 5 POINTS)**

**1.வேளாண்மையை சார்ந்திருத்தல்:** ஊரகப் பொருளாதாரம் இயற்கையையும் வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது.

**2. ஊரக மக்களின் வாழ்க்கை முறை:** பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மை நிலையிலும் பரிதாபகரமாகவும் உள்ளது.

**3. மக்கள் தொகை அடர்த்தி:** மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவி காணப்படுகின்றன.

**4. வேலைவாய்ப்பு:** பருவகால வேலையின்மை மற்றும் குறைவேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன.

**5.வறுமை:** 2011-12 மதிப்பீட்டின்படி ஊரக பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கின்றனர்.

**6. கடன் சுமைகள்:** "ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்து கடனையே விட்டுச் செல்கின்றான்". எனவே கிராம மக்கள் கடனில் மூழ்கி தற்கொலைக்கு ஆளாகின்றனர்.

**7. ஏற்றத்தாழ்வு:** ஊரகப் பகுதிகளில் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகிறது.

**26. ஆ)**

**1. விவசாயிகளின் ஏழ்மை நிலை:** நுகர்விற்காகவும், விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்காகவும் மற்றும் குடும்ப விழாக்களுக்காகவும் விவசாயிகளை கடன்பெற தூண்டுகிறது.

**2. பருவமழை பொய்த்தல்:** அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவதால் வாங்கிய கடனை திரும்ப செலுத்த இயலாமல் அவதிப்படுகின்றனர்.

**3. வழக்குகள்:** நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதற்காக செலவிட அதிக கடன் பெறுகிறார்கள்.

**4. அதிக வட்டி வீதம்:** உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தால் விவசாயிகள் கடனிலேயே மூழ்கும் நிலை உள்ளது.

**27. அ)**

1.2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 7.21 கோடி.

2. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12 வது இடத்தில் உள்ளது.

3. நகரமயமாதலின் சராசரி அளவு தமிழகத்தில் 48.4% உள்ளது.

4. இந்திய மக்கள் தொகையில் தமிழகம் 6% கொண்டுள்ளது.

5. சமச்சீர் பாலின விகிதம் என்பது பெண்களின் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதை குறிக்கிறது.

6. தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும். பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இந்த விகிதம் மிக அதிகமாகும்.

7. பாலின விகிதத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

**27. ஆ)**

1. தமிழ்நாடு மிகச்சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது.

2. நாட்டில் உள்ள நகரங்கள் கிராமப்புறங்களில் மற்றும் வேளாண் அங்காடி பகுதிகளை இணைக்க கூடிய தரமான சாலை போக்குவரத்தை கொண்டுள்ளது.

3. மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கி.மீ. தொலைவினை இணைக்கின்றன.

4. தங்க நாற்கர திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது.

5. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

6. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் ஆர் 6693 கி.மீ. ஆகும்.

7. சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதிவிரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

8. பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது.